1974 சனவரி 22]

திருக்குறளைத் தேசிய நூல் என்று பிரகடனப்படுத்த வேண்டு மென்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி ஒரு மரபைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தி ஞல் வலிவு ஏற்பட முடியும். நாம் எழுதிய பிறகு அவர்கள் மறுத்துவிட்டால் அந்த அளவில் நின்றுவிடாமல் போச்சர்யங்கள் ஏற்படவும், பல்வேறு போராட்டங்களில் இறங்கவும் வேண்டிய நிலை வரும். மத்திய அரசுக்கு எடுத்துக் கூறும்பொழுது அவர்கள் 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்திருக்கும் நாட்டில் என்று ஆரம்பித்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆகவே அப்படிப்பட்ட மரபு இருந்தால், அதைச் சுட்டிக் காட்டி கேட்க வழியிருக்கும். ஆனல் அப்படிப்பட்ட நிலைமையில்லை. அப்படி இல்லாததால் அந்தச் செயற்குறிப்பு இல்லை என்று குறிப் பிட்டேன்.

கால்டுவெல், போப் ஆகியோர் சிலைகள்.

* 62 வினு—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மெரினு கடற்கரை சாலையில் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோது அமைக்கப்பட்ட வெளிநாட்டு கிறிஸ்துவத் தமிழ் அறிஞர்களான கால்டுவெல், ஜி. யு. போப் ஆகியவர்களின் சிலைகள் தற்சமயம் அதற்கான இடங்களில் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணங்கள் யாவை ?

(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) சிலைகள் அதற்கான இடங்களில் இல்லை என்று தெரிய வருகிறது.

(ஆ) எற்கெனவே இருந்துவந்த சிலைகள் தற்காலிகமாக நிறுவப்பட்ட மாதிரி சிலைகள் என்றும், இப்போது இவை வெண் கலத்தில் நிரந்தரச் சிலைகளாக வடிக்கப்படுகின்றன என்றும்

இதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு மாதிரிச் சிலைகள் சிற்பக்கூடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது.

(உ) அரசுக்கு இதில் நேரடித் தொடர்பு இல்லை. ஆகவே, அரசாங்கம் நேரடியாக நடவடிக்கை எடுப்பதற்கில்லை. ஆனால் அதற்கு உரியவர்களிடத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

Training in the art of Sculpture

* 63 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the total number of trainees in Sculpturing who have come out of the Training Institute, run by the Directorate of Industries and Commerce during the last three years; and

(*b*) the number of them who have been placed in employment?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பதினெட்டு

(ஆ) இந்த பதினெட்டு நபர்களும் பணியில் அமர்ந்துள்ளனர்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அவர்கள் அரசுப் பணிகளில்தான் அமர்த்தப்படுகிறார்களா? தனியார் துறையிலும் வாய்ப்பிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசுப் பணியில் சிலயிடங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் தனியாக சிலபலயிடங்களில் சிற்பக் கூடங்கள் அமைத்துத் தொழில் நடத்தி வருகிறார்கள்.

Pichavaram as tourist centre

* 64 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to develop Pichavaram near Chidambaram into a Tourist Centre; and

(*b*) if so, the details thereof?